**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-08042024-7278

Volume: 8

Issue: 4

Month: April

Year: 2024

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 16.01.2024

Accepted: 23.04.2024

Published: 01.04.2024

Citation:
Shunmugaraja, J. (2024). Hale 'Tamil' Indentured Labours: Initiation of Colonial Emigration from the Targeted Indian Villages, 1879 – 1922. *Shanlax International Journal of Tamil Research*, 8(4), 79–96.

DOI:
https://doi.org/10.34293/tamil.v8i4.7278

*Corresponding Author:
jsrajamku@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Hale 'Tamil' Indentured Labours: Initiation of Colonial Emigration from the Targeted Indian Villages, 1879 – 1922

**J. Shunmugaraja**
*Ph.D. Assistant Professor, Department of Modern History*
*School of Historical Studies, Madurai Kamaraj University*
*Madurai, Tamil Nadu, India*

***Abstract***
*Fiji is a small island country, situated in the Southern Pacific Ocean.The Fijian group of islands number 250, of which about 80 are inhabited. The first missionaries to arrive in Fiji were from Tonga. On landing in October 1835, they began their work at a time when the political state of Fiji was in formative stage. The annexation of Fiji had been urged by both Australia and England since 1869.In 1873 the Earl of Kimberly commissioned Commodore Goodenough, the squadron of the Australian station and E.L. Layard, then Britian's Consul in Fiji, to investigate and report on the matter. On10 October 1874, the mission was completely successful and the sovereignty of the islands was ceded to the British Crown by the Cakobau, the Chief of Bau, Maafu, the Head of the confederacy and the other principal chiefs, in a deed of cession signed. A charter was shortly afterwards issued by Queen Victoria creating the islands as a Crown Colony and for providing a Government of the Empire there. The emigration of Indians into Fiji commenced in 1879. The campaign against slavery and its eventual abolition in Europe coincided with the ruin of Indian peasantry and the overwhelmingly redundant wage labour available in India by the first quarter of 19th century prompted the European planters to consider India, a favourable recruiting ground for their required plantation labour.The British colonizers had established sugarcane plantations in the island. For the non-availability of the local labourers for doing the manual labour in the plantations they approached the British Indian government for availing cheap labour force. The Colonial Government of India accepted their demand and through the Act XXI of 1883 included the Fiji legally into other countries for the Indian labourers emigration. The objective of this paper is to study the emigration of labour from (India) Madras Presidency to Fiji in the 19th and 20th century. There are three sections in this narrative account. The first and second sections of the paper deals with the issues regarding the Acts which were used for governing the emigration of Indian Indentured Labours from India to Fiji Islands, experiments of introduction of new Indian Indentured Labourers and the establishment of new larger Sugarcane Plantations and Factories with huge capitals on the Fiji Islands. The final section narrates theplightfulstories of recruitment of Tamil Indentured Labours from Madras Presidency to Fiji Islands and their painful working conditions in the plantations.*

***Keywords:*** *Indian Indentured Labour System, Colonialism, Indians in Fiji, Sugarcane Plantations, Hale Tamil Labourers, Indentured Labour Acts, Colonial Child Labour, Ships meant for Fiji, Emigration, Labour Recruitment from Madras Presidency*

**References**

1. Report on the Condition of Indian Immigrants in the Four British Colonies, Part. II, 1914, pp. 251-252
2. Shaista Shameem, "Migration, Labour and Plantation Women in Fiji: A Historical Perspective," in Shobhita Jain and Rhoda Reddock (ed.), Women Plantation Workers (New York: Oxford International Publishers, 1998), pp. 55-56
3. Report of the Committee on Emigration from India to The Crown Colonies and Protectorates, 1910. p. 86.
4. Quoted in C. F. Andrews & W. W. Pearson, Indentured Labour In Fiji: An Independent Enquiry, February 1916, p. 35.
5. John D. Kelley, "'Coolie' as a Labour Commodity," The Journal of Peasant Studies, Vol.19, 1992, p. 248.
6. Report of the Committee on Emigration from India to the Crown Colonies, Part III, 1910, pp. 62-63.
7. Andhra Patrika, Report on Native News Papers, January 31, 1917, Vol. 2, p. 294.
8. E.K. Fisk, The Political Economy of Independent Fiji (Canberra: Australian National University Press, 1970), p. 7.
9. S.A. Waiz, Indians Abroad Directory, 1934 (Bombay: The Imperial Indian Citizenship Association, 1934), p.192.

# திடகாத்திரமான ‘தமிழ்’ ஒப்பந்தக் கூலிகள்: இந்தியக் கிராமங்களை தொட்ட காலனியப் புலப்பெயர்வு, 1879–1922

*ஜெ. சண்முகராஜா*
நவீன வரலாற்றுத் துறை, வரலாற்றுப் புலம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை

***அறிமுகம்***
*தெற்கு பசிபிக் கடற்பகுதிகளில் அமைந்துள்ள ஒரு சிறிய தீவுக் கூட்டம் பிஜி தீவுகள் என அழைக்கப்படுகின்றன. பிஜியில் இருக்கும் தீவுகளின் மொத்த எண்ணிக்கை 250 ஆகும். இவற்றில் 80 தீவுகளில் மட்டுமே மனிதர்கள் வாழ்வதற்சுகு ஏற்ற சூழ்நிலை அமைந்துள்ளது. 1835-ல் டோங்கா என்ற பகுதியிலிருந்து முதன்முதலாகப் பிஜி தீவுகளுக்கு கிருத்துவ மிஷனரிமார்கள் சென்றனர். அவர்கள் சென்ற தருணம் பிஜி தீவுகளின் அரசியல் மற்றும் அரசாங்கம் என்பன ஆரம்பகட்ட நிலையிலேயே இருந்தன. இந்த சூழ்நிலையில் ஆஸ்திரேலிய அல்லது இங்கிலாந்து அரசுகளின் கீழ் பிஜி தீவுகளை இணைத்துக் கொள்ள வேண்டுமென்ற கோரிக்கை 1869-இல் வலுவடைந்தது. மேற்கூறப்பட்ட கோரிக்கையைப் பரிசீலிக்க 1873-இல் கிம்பர்லி* (Earl of Kimberly) *தலைமையில் ஆஸ்திரேலிய படை பிரிவுக்குத் தளபதியாகயிருந்த குட் எனப்* (Commodore Goodenough) *மற்றும் பிஜி தீவுகளுக்கு அரசியல் பிரதி நிதியாகயிருந்த இங்கிலாந்து அரசின் ஈ. ஏல். லேயார்ட்* (E.L. Layard) *ஆகியோர் அடங்கிய குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. 10 அக்டோபர் 1874-இல் பிஜி தீவுகளின் அரசியல் கூட்டமைப்புத் தலைவர்களான காகோபா மற்றும் மாபு சம்மதத்தோடு பிஜி தீவுகள் பிரிட்டிஷ் அரசின் மேலாண்மைக்கு கீழ் கொண்டுவரப்பட்டன. சிறிது கால இடைவெளியில் இங்கிலாந்து அரசி விக்டோரியா வெளியிட்ட பேர்-அறிக்கையின் மூலம் பிஜித் தீவுகள் பிரிட்டிஷ் அரசின் கட்டுபாட்டில் இயங்கும் நேரடி காலனிய நாடாக அறிவிக்கப்பட்டது. இந்தியாவிலிருந்து பிஜித் தீவுகளுக்கு 1879-ஆம் ஆண்டு முதல் முறைப்படியான சட்டத்திற்குட்பட்ட இந்திய ஒப்பந்தக் கூலித் தொழிலாளர்களின் புலப்பெயர்வு ஆரம்பித்தது. ஐரோப்பிய முதலாளிகள் பிஜித் தீவுகளில் பெருமளவிலான கரும்புச் சாகுபடி செய்து வந்தனர். கரும்புத் தோட்டங்களில் தொடர்ச்சியாக செய்ய வேண்டியிருந்த விவசாய வேலைகள் செய்வதற்கான தொழிலாளர்கள் அருகாமை பகுதிகளிலிருந்து கிடைக்கப் பெறாமையால் பிரிட்டிஷ்-இந்திய அரசைத் தொடர்பு கொண்டனர். பிரிட்டிஷ்-இந்திய காலனிய அரசு பிஜித் தீவுகளின் முதலாளிகளின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு, 1883-ஆம் ஆண்டின் இந்தியர்களின் புலப் பெயர்வு சட்டத்தின் அடிப்படையில் பிஜித் தீவுகளை தமது புலப் பெயர்வு நாடுகளின் பட்டியலோடு இணைத்துக்கொண்டது. இந்தியாவின் மதராஸ் மாகாணத்திலிருந்து பிஜித் தீவுகளுக்கு 1879-ஆம் ஆண்டு துவங்கி 1922-ஆம் ஆண்டு வரை நடந்த சட்டத்திற்குட்பட்ட தமிழக ஒப்பந்தக் கூலித் தொழிலாளர்களின் புலப்பெயர்வு ஆய்வை இக்கட்டுரை கருப்பொருளாக கொண்டுள்ளது. கட்டுரையை எளிமையாக புரிந்துகொள்ள மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதல் பகுதி பிஜி தீவுகளுக்கானப் இந்திய ஒப்பந்தக் கூலித் தொழிலாளிகளின் புலப்பெயர்வை நிர்வகிக்க இயற்றப்பட்ட சட்டவரைவுகள் குறித்தும், இரண்டாவது பகுதியில் ஆரம்பகாலத்தில் பரிசோதனையாக நடந்தப்பட்ட இந்திய ஒப்பந்தக் கூலித் தொழிலாளிகளின் புலப்பெயர்வும் மற்றும் பெரும் முதலீட்டில் உருவாக்கப்பட்ட கரும்புத் தோட்டங்கள் குறித்தும் விவரிக்கப்பட்டுள்ளது. மூன்றாம் பகுதியில் மதராஸ் மாகாணத்திலிருந்து ஒப்பந்தக் கூலித் தொழிலாளர்களாக பிஜியின் கரும்புத் தோட்டங்களுக்கு பணிபுரியச் சென்ற தமிழகத் தொழிலாளர்கள் குறித்தும், அவர்கள் மீது திணிக்கப்பட்ட பணிச்சுமைகள் மற்றும் அனுபவித்த சித்திரவதையான வாழ்க்கைச் சூழ்நிலைகளையும் பதிவு செய்துள்ளது.*

***முக்கிய வார்த்தைகள்:*** *இந்திய ஒப்பந்தத் தொழிலாளர் முறை காலனியாதிக்கம் பிஜியில் இந்தியர்கள் கரும்புத் தோட்டங்கள் ஹேல் தமிழ்த் தொழிலாளர்கள் ஒப்பந்தத் தொழிலாளர் சட்டங்கள் காலனிய குழந்தைத் தொழிலாளர்கள் பிஜிக்கான கப்பல்கள் குடியேற்றம் சென்னை மாகாணத்திலிருந்து தொழிலாளர்கள் ஆட்சேர்ப்பு*

**பிஜித் தீவுகளுக்கானப் இந்திய ஒப்பந்தக் கூலித் தொழிலாளிகளின் புலப்பெயர்வு**

நிர்வகிக்க இயற்றப்பட்ட சட்ட வரைவுகள் 1877-இல் இங்கிலாந்தின் அரசியல் விற்பனர்கள் பிரிட்டிஷ்-இந்திய அரசை பிஜித் தீவுகளுக்கு இந்திய ஒப்பந்தக் கூலித் தொழிலாளிகள் புலம் பெயரத் தகுதியுடைய பகுதி என ஏற்றுக்கொள்ளும் படியாகச் செய்தனர். ஆரம்பத்தில் அதுவரை இந்திய ஒப்பந்தக் கூலிகளின் புலப்பெயர்வுக்காக மொரிசீயஸ் மற்றும் மேற்கு-இந்திய தீவுகளுக்கு எத்தகைய சட்டங்கள் பின்பற்றப்பட்டு வந்தனவோ அவற்றையே பிஜித் தீவுகளுக்கும் பின்பற்றச் செய்தனர். பிஜி நிலப்பரப்பில் சிறிய அளவிலான மக்கள் தொகையினரே வாழ்ந்து கொண்டிருந்தனர். இங்கிருந்த பூர்வக்குடி மக்கள் தங்களுடைய பொருளாதார தேவைகளுக்காக ஐரோப்பியர்களின் கரும்புத் தோட்டங்களுக்கு வேலைத் தேடிச் செல்ல வேண்டிய எத்தகைய நிர்பந்தமும் அற்றவர்களாக இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. ஆரம்பத்தில்ஐரோப்பிய தோட்ட முதலாளிகள் பிஜியின் பூர்வகுடி மக்களை வேலைகளுக்குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டி செய்த விண்ணப்பத்தை பிரிட்டிஷ் அரசு ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டது. தங்களது தோட்டங்களில் பணிபுரிய அவ்வப்பொழுது அதிகமாகத் தேவைப்பட்ட கூலித் தொழிலாளர்களைத் தென்-பசிபிக் தீவுகளிலிருந்த பௌலினேசியன் (Polynesians) இனத்திலிருந்து பெற்றுப் பயன்படுத்திக் கொண்டனர். 1875-முதல் 1880-வரை பிஜி தீவுகளுக்கு ஆளுநராகயிருந்த லார்ட் ஸ்டண்ட்மோர் முதன் முதலாக இந்தியாவிலிருந்து ஒப்பந்தக் கூலித் தொழிலாளர்களை இறக்குமதி செய்து ஐரோப்பியர்களின் தோட்டங்களில் பயன்படுத்திக்கொள்வது சம்பந்தமாக பேசத் தொடங்கினார்.

பருத்தி விவசாயத்தில் நிகழ்ந்த பின்னடைவு, அதை தொடர்ந்து அமெரிக்கா தனது உள்நாட்டுப் போரை முடித்து பொருளாதாரம் ஏற்றம் பெறத் தொடங்கிய காலகட்டத்தில் மீண்டும் பருத்தி விவசாயத்தில் மும்முரமாக ஈடுபட்டதன் விளைவாக பருத்தியின் விலையில் ஏற்பட்ட வீழ்ச்சி மற்றும் பிரெஞ்சு-ரஷிய போர் பிரெஞ்சு சந்தைகளில் ஏற்படுத்திய தாக்கம் நேரடியாக பிஜித் தீவுகளில் தோட்டங்கள் வைத்திருந்த ஐரோப்பியர்களின் பொருளாதாரத்தை பாதித்தது. இவ்விதமான பொருளாதார நெருக்கடி நிறைந்த காலத்தில் இந்திய ஒப்பந்தக் கூலித் தொழிலாளர்களை இறக்குமதி செய்து தங்களது தோட்டங்களில் பயன்படுத்திக்கொள்ள முடியாத நிலையில் பிஜித் தீவுகளின் ஐரோப்பிய முதலாளிகள் இருந்தனர்.

இந்த நிலையில் 1879-வரை இந்தியர்கள் பிஜித் தீவுகளுக்கு அனுப்பி வைக்கப்படவில்லை. முதன்முதலாக சர். அர்தூர் கார்டண் (Sir Arthur Gordon) இங்கிலாந்து காலனிய அதிகாரிகளுடன் தொடர்ந்து மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளின் மூலம் இந்திய கூலித் தொழிலாளர்களை பிஜித் தீவுகளுக்கு இறக்குமதி செய்வதற்குத் தேவைப்படும் செலவுக்கான பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்திய கூலித் தொழிலாளர்களின் இறக்குமதி குறித்து வெளியிடப்பட்ட தற்காலிக இந்திய அரசு ஆணையைப் பிஜியின் வெள்ளை தோட்ட முதலாளிகள் ஏற்றுக்கொள்ள மறுத்தனர். தற்காலிக ஆணையின் சரத்துக்கள் மிக கட்டுப்பாடுடையவை என்றும் மேலும் அவை அதிகபட்ச செலவுடையன எனக் கூறி நிராகரித்தனர். இதற்கு மாற்றாக தீவுகளிருந்து கிடைக்கப்படும் தொழிலாளர்களை பயன்படுத்த தேவைப்படும் பொருளாதாரத்தை வழங்கி ஆதரிக்க காலனியாளர்களை வேண்டினர். இந்த பிரச்சினை லண்டனிலும் பிரதிபலித்தது. இந்திய ஒப்பந்தக் கூலித் தொழிலாளர்கள் பிஜித் தீவுகளுக்கு இறக்குமதி செய்யப்படும் சந்தர்ப்பத்தில் அவர்களுடைய பாதுகாப்பு தீவுகளில் வாழ்ந்து வரும் பூர்வக்குடிகள் மூலம்

கேள்விக்குள்ளாக்கப்படும் எனக் கூறி பூர்வக்குடிகள் பாதுகாப்புக் கூட்டமைப்பு பிரிட்டிஷ் காலனிகளை நிர்வகிக்கும் அரசாங்க செயலரிடம் குற்றம்சாட்டியது. இச்சமயத்தில் இந்திய ஒப்பந்தக் கூலித் தொழிலாளர் முறையை பிஜித் தீவுகளுக்கு நீட்டிப்பதற்கும் இங்கிலாந்தில் எதிர்ப்பு கிளம்பியது.

1877-இல் சர். அர்தூர் கார்டண், இந்தியாவுடனான புலப் பெயர்வை அதிகாரப் பூர்வமாக ஆரம்பிப்பதற்கு தமது சார்பில் பிஜித் தீவுகளுக்குக்கான புலப்பெயர்வு துறையின் உயர் அதிகாரியான (Agent General of Immigration) சார்லஸ் மைகல்லை (Charles Mitchell) இந்தியா அனுப்பயிருப்பதாக அறிவித்தார். சர். அர்தூர் கார்டணின் திட்டத்தை காலனிய நாடுகளின் செயலாளர் உடனே அங்கீகரிக்கவும் செய்தார். அதேவேளையில் இவ்விதம் இறக்குமதி செய்யப்படும் கூலித் தொழிலாளர்களுக்கு ஆகும் ஒட்டு மொத்த செலவில் மூன்றில் ஒரு பகுதி மட்டுமே அரசால் ஏற்க முடியுமென அறிவுறுத்தியது, செய்யபடும் செலவுகளும் இந்தியக் கூலித் தொழிலாளர்களின் இறக்குமதிக்கும், அவர்களின் ஒப்பந்தகாலம் முடிந்தபின்பு தாயகம் திரும்புவதற்கும் மட்டுமே பயன்படுத்த வேண்டுமென வரையறை செய்தது.

1877-இல் சர். அர்தூர் கார்டணின் திட்டத்தை நிறைவேற்ற சார்லஸ் மைகல் இந்தியாவிற்குப் பயணம் மேற்கொண்டார். இந்திய ஒப்பந்தக் கூலித் தொழிலாளர்களை நிர்வகிக்க இயற்றப்பட்ட தற்காலிக சட்டவரைவையும் பிரிட்டிஷ்-இந்திய அரசின் ஒப்புதலுக்குச் சமர்ப்பித்தார். இந்தத் தற்காலிக சட்டவரைவில் சில திருத்தங்கள் செய்து பிரிட்டிஷ்-இந்திய அரசு ஏற்றுக்கொண்டது. இவ்விதம் அங்கீரிக்கப்பட்ட தற்காலிக சட்டவரைவு 27 மே 1878-இல் பிஜி தீவுகளில் வாழும் இந்திய ஒப்பந்தக் கூலித் தொழிலாளர்கள் கட்டாயமாகப் பின்பற்ற வேண்டிய சட்டமாக அறவிக்கப்பட்டது. பிஜி அரசு இந்தியாவிலிருந்து ஒப்பந்தக் கூலித் தொழிலாளர்களைப் பிஜித் தீவுகளுக்கு தேர்ந்தெடுக்கும் பணியைத் தமக்குரிய பிரதிநிதியை இந்தியாவில் நியமிக்க செய்யாமல் பிற காலனிகளுக்காக ஏற்கனவே வேலைகள் செய்து கொண்டிருந்த தொடர்புத் துறை ஊழியர்களிடமே ஒப்படைத்தது. ஏனைய காலனிகளைப் போலவே சென்னையைத் தவிர்த்து கல்கத்தாவிலிருந்து பெறப்பட்ட தொழிலாளர்களில் மூன்றில் ஒரு பகுதியைப் பிஜி பெற்றுக்கொண்டது. 1902-வரை பிஜி தமக்குரிய இந்திய ஒப்பந்தக் கூலித் தொழிலாளர்களை ஆட்சேர்ப்பு செய்யும் புலப்பெயர்வு நிறுவனத்தைக் கல்கத்தாவில் மட்டுமே வைத்திருந்தது. இங்கிருந்து ஒவ்வொரு வருடத்தின் முதல் ஆறுமாத காலகட்டத்தில் மட்டுமேப் பிஜித் தீவுகளுக்கு தொழிலாளர்கள் அனுப்பி வைக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தியாவில் ஒப்பந்தக் கூலித் தொழிலாளர்கள் பெறப்படுவதில் சிக்கல்கள் ஏற்படும் வருடங்களில் மட்டும் தொழிலாளர்கள் வழங்கப்படுவதுதென்பது பிஜித் தீவுகளின் தேவையைப் பொருத்தே அமைந்தது.

பிஜி அரசு எப்பொழுது தமக்கு வேண்டிய ஒப்பந்தக் கூலித்தொழிலாளர்களை பெறும் நோக்கில் தமது இந்தியப் பிரதிநிதிகளுக்கு விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்றதோ அப்பொழுது பிஜி அரசின் முதன்மை முகவர்கள் தமது துணை-முகவர்கள் மூலம் அல்லது ஆட்காட்டிகள் மூலம் தொழிலாளர்கள் தேவையைப் பூர்த்தி செய்வார்கள் என தீர்மானிக்கப்பட்டது. முதன்மைப் பிரதிநிதிகள் தமது இந்திய துணை-பிரதிநிதிகளை பணிகளில் அமர்த்தும் சந்தர்ப்பங்களில் தொழிலாளர்களை தேர்ந்தெடுக்கும் பணியைச் செய்வதற்கு அவர்களிடம் அரசு வழங்கிய முறையான அங்கீகாரம் உள்ளதா என்பதை உறுதி செய்துக்கொள்ள அறிவுறுத்தப்பட்டனர். ஒப்பந்தக் கூலித்தொழிலாளர்கள் தேவை

அதிகமாகயிருந்து, தொழிலாளர்களும் புலப்பெயர்வுக்குத் தயாராக இருக்கும் பட்சத்தில், அரசின் முதன்மை முகவர் தொழிலாளர்கள் பெறவிருக்கும் மாவட்டத்திற்குரிய துணை-முகவர்க்கு அரசின் முறையான அங்கீகாரம் பெற்றுத்தருவார்.

எந்த ஒரு தடையுமின்றி புலப்பெயர்வு என்பது தொடர்ந்து நடப்பதற்கு முக்கிய காரணியாக விளங்கியது பணத்தின் மீதிருந்த ஆசை மட்டுமே. தொழிலாளர்களைப் புலப் பெயர்வுக்குத் தேர்ந்தெடுக்கும் அல்லது தயார் செய்யும் துணை-முகவர்களுக்கும், ஆட்காட்டிகளுக்கும் தரகுத்தொகை வழங்கப்பட்டது. இவ்விதம் பெறப்படும் தரகுத் தொகை ஆண்களுக்கு, பெண்களுக்கு மற்றும் குழந்தைகளுக்கு என வெவ்வேறு அளவில் வழங்கப்பட்டது. 1886-இல் ஒரு ஆண் கூலித் தொழிலாளியை புலப் பெயர்வுக்கு தேர்ந்தெடுத்துத் தயார் செய்வதற்கு 17 ரூபாய் முதல் 25 ரூபாய் வரை தரப்பட்டது, ஒரு பெண் கூலித் தொழிலாளிக்கு ரூபாய் 25 முதல் 34 வரை தரப்பட்டது, ஒரு குழந்தைத் தொழிலாளிக்கு ரூபாய் 12 முதல் 8 ரூபாய் வரை வழங்கப்பட்டது. 1905-இல் துணை-முகவர்களுக்கு வழங்கப்பட்ட தரகுத் தொகையின் விகிதம் ஒரு ஆணுக்கு 40 ரூபாயாகவும், பெண்ணுக்கு 55 ரூபாயாகவும் அதிகரித்து வழங்கப்பட்டது. 1908-இல் வழங்கப்பட்ட தரகு தொகை ஒரு ஆணுக்கு 25 ரூபாயாகவும், பெண்ணுக்கு ரூபாய் 35 ஆகவும் வீழ்ச்சியடைந்தது. 1910-இல் மீண்டும் துணை-முகவர்களுக்கு வழங்கப்பட்ட தரகுத் தொகையின் விகிதம் ஒரு ஆணுக்கு 35 முதல் 40 ரூபா யாகவும், பெண்ணுக்கு 45 முதல் 50 ரூபாயாகவும், குழந்தைகளுக்கு 17 முதல் 18 ரூபாயாகவும் அதிகரித்து வழங்கப்பட்டது. 1915-இல் ஒரு பெண் கூலித் தொழிலாளியை புலப் பெயர்வுக்குத் தேர்ந்தெடுத்துத் தயார் செய்வதற்குத் தரகுத் தொகையாக ரூபாய் 55 வழங்கப்படுமென வரையறை செய்யப்பட்டது.

### ஆரம்பகாலப் பரிசோதனைகள்

பெரும் முதலீட்டில் உருவாக்கப்பட்ட கரும்புத் தோட்டங்கள்

1878-இல் பிரிட்டிஷ்-இந்திய அரசு தமது கூலித் தொழிலாளர்களின் பிஜித் தீவுகளுக்கான புலப்பெயர்வை முறையாக அறிவித்தது. அதே ஆண்டு பிஜி அரசின் சார்பில் கல்கத்தாவில் புலப்பெயர்வு நிறுவனத்தை ஏற்படுத்தி அதற்கான முகவரைப் பணியில் அமர்த்தியது. 1879-இல் "லியோனிதாஸ்" (Leonidas) என்ற கப்பல்மூலம் முதன்முதலாக 908 இந்திய ஒப்பந்தக் கூலித் தொழிலாளர்கள் பிஜி தீவுகளுக்குள் இறக்குமதி செய்யப்பட்டனர். அவர்கள் லெவூக்கா தீவில் இரண்டு நாட்கள் நோயின் தாக்கத்திலிருந்து விடுபடுவதற்காக தனிமைப்படுத்தி வைக்கப்பட்டனர். அதன் பின்னர் சர். அர்தூர் கார்டண் இந்திய தொழிலாளர்களிடம் அவர்கள் செய்ய வேண்டிய வேலைகள் மற்றும் சம்பளம் குறித்துப் பேசினார். பெரும்பான்மையான தொழிலாளர்கள் நோய் தொற்றுக்கு ஆட்பட்டுயிருந்ததால் ஐரோப்பிய பண்ணை முதலாளிகள் இந்தியாவுடனான புலப் பெயர்வுக் கொள்கையைக் கடுமையாக விமர்சித்து தங்களது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். தோட்ட முதலாளிகள் அனைவரும் ஒன்றிணைந்து புதிய வரவாக லெவுக்கா தீவில் வைக்கப்பட்டிருந்த இந்தியத் தொழிலாளர்களைத் தங்களது தோட்டங்களில் பணி அமர்த்தப் போவதில்லை என முடிவு செய்தனர். மேலும் இந்தியத் தொழிலாளர்களுக்குப் பதிலாக பசிபிக் தீவுகளிலிருந்து தொழிலாளர்களை இறக்குமதி செய்து தங்களது தோட்டங்களில் பயன்படுத்திக் கொண்டனர். 464 இந்தியத் தொழிலாளர்களை பணி அமர்த்த வேண்டிய கட்டாய நிலைக்கு பிஜி அரசு தள்ளப்பட்டது. 464 இந்தியத் தொழிலாளர்களில் 106 நபர்களை ராபி தீவிலிருந்த (Rabi Island) தளபதி ஜெ. கில் (J. Hill) தமது தோட்டங்களில் வேலைக்கு அமர்த்திக் கொண்டார். ஏனையத் தொழிலாளர்கள்

சுவாவிலிருந்த பிஜி அரசின் பொதுத் துறையிலும், காவல் துறையிலும் பணி அமர்த்தப்பட்டனர். இவ்விதமாக இந்திய தொழிலாளர்கள் பிஜித் தீவுகளின் புதிய முதலீடாக அறிமுகப்படுத்தப்பட்டனர்.

ஆரம்பகால இந்தச் சோதனைகள் வெற்றிகரமாக அமையவில்லை. இருப்பினும் இத்தகு தோல்விக்குப் பிஜி முதலாளிகள் இந்தியத் தொழிலாளர்களின் மொழி மற்றும் கலாச்சாரம் மீது சரியான புரிதல்கள் இல்லாமல் இருந்ததுவே காரணமாக அமைந்தது. மே மாதம் 1881-இல் பிஜி அரசின் துணை-ஆளுநராகயிருந்த தர்ஸ்டண் (Thurston) ஆஸ்திரேலியாவுக்குப் பயணம் மேற்கொண்டார். தர்ஸ்டணின் பயணத்தின் நோக்கமாக சிட்னியிலிருந்த கலோனியல் சுகர் ரிபைனிங் கம்பெனியை (Colonial Sugar Refining Company) பெரிய அளவிலான முதலீட்டுடன் பிஜி தீவுகளில் தொழில் தொடங்க தூண்ட வேண்டுமென்ற கருத்தையே அடிப்படையாகக் கொண்டிருந்தது. இதையடுத்து ரேவாவில் சர்க்கரை ஆலை ஒன்றை நிறுவ கலோனியல் சுகர் ரிபைனிங் கம்பெனி சம்மதித்தது. கலோனியல் சுகர் ரிபைனிங் கம்பெனி தொழில் தொடங்க பிஜி அரசு 1,000 ஏக்கர் நிலத்தை வழங்கியது மற்றும் வழங்கபட்ட நிலத்தைவிட அதிக நிலம் கம்பெனிக்கு தேவைப்பட்டால் மேலும் 1,000 ஏக்கர் நிலத்தை விலைக்கு வாங்கிக்கொள்ளலாம் என பிஜி அரசு அறிவித்தது.

இதனைத் தொடர்ந்து சர்க்கரை ஆலைகளின் முதலாளிகளும் கரும்புத் தோட்ட முதலாளிகளும் இந்திய ஒப்பந்தக் கூலித் தொழிலாளர்களை வேலைகளுக்காகப் பயன்படுத்திக்கொள்ள தீர்மானித்தனர். 1881-இல் பொதுத்துறை நிறுவனங்களில் வேலை செய்வதற்காக இந்திய ஒப்பந்தக் கூலித் தொழிலாளர்கள் வேண்டி விண்ணப்பித்தனர். இதற்கு அடுத்தாண்டு 1882-இல் செய்யப்பட்ட விண்ணப்பத்தில் தோட்டத் தொழிலில் ஈடுபடுத்துவதற்காக மேலும் 250 இந்திய ஒப்பந்தக் கூலித் தொழிலாளர்கள் வேண்டுமென சேர்த்து கோரப்பட்டது. இவ்வாறு அதிகமாக பெறப்பட்ட தொழிலாளர்கள் ரேவாவின் நிலங்களைக் கரும்பு பயிரிடுவதற்குத் தக்கவாறு சுத்தப்படுத்திப் பதப்படுத்தப் பயன்படுத்தப்பட்டனர். மேலும் இத்தகைய வேலைகள் செய்ய தேவைப்பட்ட தொழிலாளர்கள் அருகாமைத் தீவுகளிலிருந்தும் வரவழைக்கபட்டனர். 1881-இல் அருகாமைத் தீவுகளிலிருந்து வரவழைக்கப்பட்டு ஒப்பந்தக் கூலிகளாக தோட்டங்களில் வேலை செய்து வந்த 587-இல் தொழிலாளர்களில் 220-பேர் உயிரிழந்தனர். ஆகையால் கலோனியல் சுகர் ரிபைனிங் கம்பெனியின் ரோவின் கரும்புத் தோட்டங்களுக்கு அருகாமை தீவுகளிலிருந்து தொழிலாளர்களை இறக்குமதி செய்து பணி அமர்த்துவதற்கு பிஜி அரசு தடைவிதித்தது. இவ்விதமாக சுகர் ரிபைனிங் கம்பெனி இந்திய ஒப்பந்தக் கூலித் தொழிலாளர்களை சார்ந்தே இயங்க வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது.

1882-இல் பிஜி அரசின் புதிய ஆளுநராகப் பொறுப்பு ஏற்றுக் கொண்ட டீஸ் வோவுக்ஸ் (Des Voeux) பல்வேறு உத்திகளைக் கையாண்டு இந்தியத் தொழிலாளர்களை பிஜி தீவுகளில் அறிமுகப்படுத்துவதற்கு காரணமாக இருந்தார். முதன் முதலாக கல்கத்தா துறைமுகத்திலிருந்து இந்திய ஒப்பந்தக் கூலித் தொழிலாளர்களை பிஜி தீவுக்கு சுமந்து வந்த சரக்குக்கப்பல் லியோனிதாஸ்க்கு வழங்கபட வேண்டிய வாடகைப் பணத்தை ஒரே தவணையில் கொடுக்க முடியாமல் பிஜி அரசு திணறியது. லியோனிதாஸ் சரக்குக் கப்பலுக்கு தர வேண்டிய வாடகை நிலுவைத் தொகையை ஐந்து ஆண்டுகளுக்கு தவணை முறையில் பிரித்து வழங்கியது பிஜி அரசு. பிஜி அரசு பொருளாதாரத்தில் நலிவுற்று இருந்தாலும் டீஸ் வோவுக்ஸ் இந்திய ஒப்பந்தக் கூலிகளின் புலப்பெயர்வு இந்தியாவிலிருந்து தொடர்ந்து நடக்குமெனக் கரும்புத்தோட்ட முதலாளிகளுக்கு உறுதியளித்தார். லண்டனில் இருக்கும் காலனிய நாடுகளின்

செயலாளரின் முன் அனுமதி பெறாமல் இந்திய ஒப்பந்தக் கூலிகளை இறக்குமதி செய்வதற்கான செலவில் பாதியை பிஜி அரசு ஏற்றுக்கொள்ளுமென டீஸ் வோவுக்ஸ் அறிவித்தார். ஆனால் டீஸ் வோவுக்ஸின் அறிவிப்பைக் காலனிய நாடுகளின் செயலாளர் ஏற்றுக்கொள்ள மறுத்ததோடு பிஜி தீவின் ஆளுநர் இந்திய அரசோடு மேற்கொள்ளும் புலப்பெயர்வு திட்டத்திற்கு செய்யப்படும் செலவிற்கு தமது வருவாயிலிருந்து மூன்றில் ஒரு பங்கு தொகையை மட்டுமே ஒதுக்கீடு செய்யவேண்டும் என உத்தரவு பிறப்பித்தார். மேலும் இந்திய ஒப்பந்தக் கூலித் தொழிலாளர்களைச் சுமந்து வரும் சரக்குக் கப்பல் கம்பெனிகளுக்குத் தர வேண்டிய வாடகைத்தொகை, நிலுவை தொகைகள் ஏதும் இல்லாமல் ஒரே தவணையில் வழங்க வேண்டுமெனவும் தமது உத்தரவில் வலியுறுத்தினார்.

இவ்வாறு 1882-இல் இந்திய ஒப்பந்தக் கூலிகளின் புலப்பெயர்வு பிஜித் தீவிற்கு தொடங்கியது. ஒப்பந்தக் கூலிகளின் இறக்குமதிக்குச் செய்யப்பட்ட செலவுகள் முழுவதும் தோட்ட முதலாளிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஒப்பந்தக்காலம் முடிவுற்ற கூலித் தொழிலாளர்கள் இந்தியா திரும்புவதற்கான இலவசப் பயணச்செலவையும், இறக்குமதி செய்யப்பட்ட இந்திய தொழிலாளர்களை நிர்வகித்த புலப்பெயர்வு நிறுவனத்திற்கான செலவை மட்டும் பிஜி அரசு ஏற்றுக்கொள்வதாக அறிவிப்பு வெளியிட்டது.

இத்தகைய அறிவிப்பு சர்க்கரை உற்பத்தியாளர்கள் மத்தியிலும் இந்திய ஒப்பந்தக் கூலிகள் மத்தியிலும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. ஏராளமான குறுந்தோட்ட முதலாளிகள் ஒப்பந்த தொழிலாளர்கள் தேவை என அரசிடம் வழங்கியிருந்த விண்ணப்பத்தைச் திரும்பப் பெற்றுக் கொண்டனர். ஏனெனில் அவர்களால் இந்தியத் தொழிலாளர்களின் புலப்பெயர்வுக்கு தேவையான ஒட்டுமொத்தச் செலவினங்களையும் ஒரே நேரத்தில் செய்ய முடியாத பொருளாதார நிலையில் இருந்ததே காரணமாகும். பணவசதி மிக்க முதலாளிகள் தேவையான மூலதனங்களைச் செய்து தங்களுக்கென ஒதுக்கப்பட்ட ஒப்பந்தக் கூலித்தொழிலாளர்களை தோட்டங்களுக்கு வரவழைத்துக்கொண்டனர். இத்தகைய தருணத்தைப் பயன்படுத்தி சுகர் ரிபைனிங் கம்பெனி தனக்குத் தேவைப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தி பிஜி அரசிடம் விண்ணப்பித்தது. ஆரம்பத்தில் இந்திய ஒப்பந்தக் கூலிகள் வேண்டுமென 30 கரும்புத் தோட்ட முதலாளிகள் பிஜி அரசிடம் விண்ணப்பித் திருந்தனர். இங்கிலாந்தின் காலனிய நாடுகளின் செயலாளர் வெளியிட்ட உத்தரவினால் 9 கரும்புத் தோட்ட முதலாளிகளால் மட்டுமே இந்தியத் தொழிலாளர்களைப் பெற்றுக்கொள்ள முடிந்தது. அதே நேரம் தொழிலாளர்கள் தேவையில் எந்தவொரு மாற்றமும் பிஜி அரசு செய்யாமல் பிரிட்டிஷ்-இந்திய அரசிடம் விண்ணப்பித்தது.

இவ்வாறு 1882-இல் 908 இந்திய ஒப்பந்தக் கூலித் தொழிலாளர்கள் பிஜி சென்றடைந்தனர். அவர்களில் 243 பெண்களும் அடங்குவர். பெரும்பான்மையான தொழிலாளர்கள் வட இந்திய பகுதிகளான பாஸ்தி, பைசாபாத், கோண்டா, கோரக்புர், ஆலம்கார், காசிப்புர் மற்றும் ஜான்புரிலிருந்து வந்தனர். 908 தொழிலாளர்களில் 20 நபர்கள் மட்டுமே குறுந்தோட்ட முதலாளிகளுக்கு ஒதுக்கப்பட்டனர். ஏனைய தொழிலாளர்கள் சுகர் ரிபைனிங் கம்பெனி தோட்டங்களிலும் சர்க்கரை ஆலையிலும் பணி அமர்த்தப்பட்டனர்.

அதிகாரத்தைக் கைப்பற்றிய 12-ஆண்டு களில் ஐரோப்பிய சமூகம் பிஜித் தீவின் பாரம்பரிய விவசாயத்தையும், வியாபார முறையையும் அதன் வடிவமைப்பிலிருந்து முற்றிலுமாக மாற்றியமைத்தது. ஏராளமான

பழைய ஐரோப்பிய குடியேற்றக்காரர்கள் புதிய குடியேற்றக்காரர்களின் வரவினால் குடியிருப்புக்களைக் காலி செய்து விட்டு தீவினிலிருந்து வெளியேறினர். பிஜித் தீவிற்கு தேவைப்பட்ட கைவினைஞர்களையும் மேற்பார்வையாளர்களையும், எழுத்தர்களையும் சுகர் ரிபைனிங் கம்பெனி இறக்குமதி செய்து அறிமுகப்படுத்தியது.

பிஜித் தீவில் இருந்த சுகர் ரிபைனிங் கம்பெனியின் கரும்புத் தோட்டங்களை வளர்த்தெடுப்பதற்கு பெரும்பாலும் இந்திய ஒப்பந்தக் கூலித் தொழிலாளர்களையே பயன்படுத்தியது. 1883-இல் பிஜில் இருந்த “பா”-தீவில் தமது இரண்டாவது மிகப் பெரிய சர்க்கரை ஆலையை இந்திய தொழிலாளர்களின் உதவியோடு சுகர் ரிபைனிங் கம்பெனி நிர்மானித்தது. 1883-லிருந்து 1884-வரை ஆலையின் ஆரம்பகட்ட சர்க்கரை உற்பத்தி செய்வதற்கு தேவையான தொழிலாளர்கள் கிடைப்பதில் சிக்கல்கள் இருந்தன. 1883-வது வருடம் பிப்ரவரி மாதம் சுகர் ரிபைனிங் கம்பெனியின் மேலாளர் லெக்சன் (Lexan) கம்பெனிக்குத் தேவையான தொழிலாளர்களை இந்தியாவிலிருந்து வரவழைத்துத் தரவில்லை என்றால் கம்பெனியின் ஒட்டுமொத்த மூலதனத்தையும் பிஜியிலிருந்து வேறு நாடுகளுக்கு மாற்ற நேரிடுமென பிஜி அரசை மிரட்டினார். லெக்சன் தமது கம்பெனிக்கு தேவைப்பட்ட தொழிலாளர்களைச் சீனா அல்லது தென்-இந்திய பகுதிகளிலிருந்து வரவழைத்துத் தர வேண்டுமென குறிப்பிட்டு வேண்டினார்.

ஆனால் நாக்ஸ் (Knox) சீன தொழிலாளர்களைப் பிஜி தீவுகளில் அறிமுகப்படுத்துவதற்கு கடுமையான எதிர்ப்புத் தெரிவித்தார். குயின்லேண்ட் தீவுகளில் சீனத் தொழிலாளர்களை அறிமுகப்படுத்தியதன் மூலம் பெறப்பட்ட கசப்பான அனுபவத்தை நினைவுப்படுத்தினார். மேலும் சீனத் தொழிலாளர்களை அறிமுகம் செய்வதற்கு ஏராளமான பொருள் செலவு ஆகும் எனவும் எச்சரித்தார்.

### தமிழ் ஒப்பந்தக் கூலிகள்: அறிமுகம்

சுகர் ரிபைனிங் கம்பெனிக்கு தேவையான தொழிலாளர்களை தென்-இந்தியாவிலிருந்து கொண்டு வருவதற்கான முயற்சிகளை 1883-இல் பிஜி அரசு ஆரம்பித்தது. தங்களுக்குத் தேவையான ஒப்பந்தக் கூலித் தொழிலாளர்களை தென்-இந்தியாவிலிருந்து பெற முடியுமா என மதராஸிலிருந்த மொரிசீயஸ் தீவுக்கான புலப்பெயர்வு நிறுவனத்தின் ஆட்சேர்பு அதிகாரியிடம் விசாரணைமேற்கொண்டது. விசாரணையின் அடிப்படையில் பிஜி அரசுக்கு மொரிசீயஸ் தீவுக்கான புலப்பெயர்வு நிறுவனத்தின் ஆட்சேர்பு அதிகாரி வழங்கிய அறிக்கையில் மொரிசீயஸ்க்குத் தேவைப்படும் ஒப்பந்தக் கூலித் தொழிலாளர்களையே தம்மால் தென்-இந்திய பகுதிகளிலிருந்து சேர்க்க முடியாத நிலை நிலவுவதாகக் குறிப்பிட்டார்.

1883-84-இல் பிரிட்டிஷ்-இந்திய அரசு காலனிய நாடுகளுக்கான புலப்பெயர்வு நிறுவனங்களின் எட்டு ஆட்சேர்பு அதிகாரிகளுக்கு இந்திய முழுவதும் ஒப்பந்தக் கூலிகளை சேர்ப்பதற்கான உரிமத்தை வழங்கி சட்ட பூர்வமாகஅங்கீகரித்தது. 16ஜீலை1883-இல் எப். டி லா மாரி (F. De La Mare) என்பவரை பிஜித் தீவுகளுக்குத் தேவையான ஒப்பந்தக் கூலித் தொழிலாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான புலப்பெயர்வு நிறுவனத்தின் அதிகாரியாகக் கல்கத்தாவில் நியமனம் செய்தது. பிஜித் தீவுகளுக்கான இத்தகைய வேலையை இதுவரை செய்துவந்த வார்னர் (Warner) என்பவரிடமிருந்து எப். டி லா மாரி பொறுப்பினைப் பெற்றுக்கொண்டார் என 7 டிசம்பர் 1883-இல் பெங்கால் அரசு தனது விவரத் தொகுப்பு அகராதியில் அறிவித்தது.

1882-83-இல் பிரிட்டிஷ்-இந்திய அரசிடமிருந்து 1,000 தொழிலாளர்கள் வேண்டுமென பிஜி அரசு விண்ணப்பித்தது. இருப்பினும் 855 ஒப்பந்தக் கூலித் தொழிலாளர்களையே இந்திய அரசால் பிஜிக்கு வழங்க முடிந்தது. 1883-84-இல்

கரும்புத் தோட்டங்களில் வேலை செய்வதற்கு 2,100 இந்திய தொழிலாளர்கள் தேவைப்படுகின்றனர் என அறிவித்தது. ஆனால் இந்திய அரசால் அந்த ஆண்டில் 1,401 தொழிலாளர்களை மட்டுமே பிஜிக்கு அனுப்ப முடிந்தது. “பேயார்டு” (Bayord), ‘பூனா’, ‘சிறியா’ ஆகிய கப்பல்கள் இந்திய ஒப்பந்தக் கூலித் தொழிலாளர்களை கல்கத்தாவின் துறைமுகத்திலிருந்து பிஜிக்கு ஏற்றிச் சென்றது. 1884-85-இல் 131 ஆட்சேர்ப்பு உரிமம் புலப்பெயர்வு நிறுவனங்களுக்காக வேலை செய்த துணை-ஆட்காட்டிகளுக்கு வழங்கப்பட்டது. இவர்களில் இரண்டு நபர்களுக்கு வழங்கப்பட்ட உரிமம் குற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்ட காரணத்திற்காகப் பறிக்கப்பட்டது.

10 மே 1887-இல் 487 இந்திய ஒப்பந்தக் கூலிகள் ‘பெர்கிலிஸ்’ (Pericles) என்ற கப்பல் மூலம் பிஜித் தீவுகளுக்கு பயணம் செய்தனர். கப்பல் பயணத்தில் காலரா நோய் தொற்று ஏற்பட்டு அவர்களில் 25 நபர்கள் பயணத்தின் நடுவே இறந்து போயினர். இதே ஆண்டு 515 ஒப்பந்தக் கூலிகள் ‘கௌவுரா’ என்ற கப்பலில் பயணம் மேற்கொண்டனர். அவர்களில் 18 நபர்கள் காலரா தொற்று ஏற்பட்டு பயணத்தின் நடுவே மாண்டு போயினர்.

1886-இல் கல்கத்தாவில் பரவிய தொற்றுநோயின் காரணமாக 176 இந்திய தொழிலாளர்களைச் சட்டவிரோதமாகப் புலம்பெயர அனுமதிக்காமல் ஒரு மாத காலத்திற்கும் மேலாக பிஜி புலப் பெயர்வு நிறுவனத்தின் அதிகாரிகள் கிட்டங்கிகளில் அடைத்து வைத்திருந்தனர். இத்தகைய செயல் இந்திய புலப் பெயர்வுச் சட்டத்திற்கு எதிரானது என பிரிட்டிஷ்-இந்திய அரசு அறிவித்தது. பிஜி புலப் பெயர்வு நிறுவனத்தின் சட்டவிரோத செயல் குறித்து விசாரணை மேற்கொள்ள நீதிபதிகள் தலைமையில் குழு ஒன்றும் நியமிக்கப்பட்டது. விசாரணை தடையின்றி நடப்பதற்கு ஏதுவாக 1 ஏப்ரல் 1886 முதல் பிஜி தீவுகளுக்கான இந்திய தொழிலாளர்களின் புலம் பெயர்வை பிரிட்டிஷ்-இந்திய அரசு தடைசெய்து உத்தரவு பிறப்பித்தது. தடை உத்தரவு 1887-ஆம் ஆண்டு வரை நீட்டிக்கப்பட்டது.

1886-இல் புலப்பெயர்வு தடை செய்யப்படுவதற்கு முன்பாக இரண்டு கப்பல்களில் 994 இந்திய ஒப்பந்த கூலித் தொழிலாளர்கள் பிஜி சென்றிருந்தனர். இதேவருடம் 13 ஒப்பந்தக் கூலிகள் ஒப்பந்தகாலம் முடிவடைவதற்கு முன்பாகவே பிஜியிலிருந்து தாயகம் அனுப்பப்பட்டனர். இவர்களின் பொருளாதார நிலை குறித்தோ, உடல்நலம் குறித்தோ தகவல்கள் ஏதும் அன்றைய வருட அறிக்கையில் காலனிய அரசால் பதிவு செய்யாமல் தவிர்க்கப்பட்டது.

1886-ஆவது வருடம் இந்திய ஒப்பந்தக் கூலித் தொழிலாளர்களின் ஐரோப்பிய காலனிகளுக்கான புலப் பெயர்வு வரலாற்றில் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. ஏனெனில் 1871-ஆவது வருட இந்திய புலப்பெயர்வு சட்டத்தை பிரிட்டிஷ்- இந்திய அரசு ரத்து செய்து உத்தரவு பிறப்பித்தது. 1871-ஆவது வருட இந்திய புலப்பெயர்வு சட்டதிற்குப் பதிலியாக 1883-ஆவது வருட சட்டம் 21 அமல்படுத்தப்பட்டது. பிஜி கரும்புத் தோட்டங்களுக்கும் சர்க்கரை ஆலைகளுக்கும் தேவைப்பட்ட தொழிலாளர்களின் அளவு நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே போனது. இதே வருடம் 345 ஆள்காட்டிகளுக்கு ஒப்பந்தக் கூலித் தொழிலாளர்களை சேகரிப்பதற்கான உரிமத்தை பிரிட்டிஷ்-இந்திய அரசு வழங்கியது. இவற்றில் 32 உரிமம் பிஜித் தீவுகளுக்காக ஒப்பந்தக் கூலித் தொழிலாளர்களைச் சேர்க்கும் ஆள்காட்டிகளுக்கு வழங்கப்பட்டது. இருப்பினும் ஆள்காட்டிகளால் ஒரு நபரைக் கூட இந்தியாவிலிருந்து பிஜிக்கு புலம்பெயரச் செய்ய முடியவில்லை.

1880-களின் நடுவில் ஏற்பட்ட கடுமையான சர்க்கரை விலையின் வீழ்ச்சி பிஜி தீவின் நௌவா (Navua) பகுதியிலிருந்த சார்ப் பிலிச்சர் கம்பெனியை (Sharpe - Fletcher

Company) நஷ்டத்திற்குள் உள்ளாக்கி மூடச் செய்தது. சார்ப் பிலிச்சர் கம்பெனியில் பணிபுரிந்த 518 இந்தியத் தொழிலாளர்கள் வேலை இழந்தனர். சர்க்கரையின் விலை வீழ்ச்சி தொடர்ந்து கடுமையாக்கிக் கொண்டே போனதால் ஏனைய ஆலைகளும் மூடப்படும் அபாயத்திற்குள் தள்ளப்பட்டன. பிஜி கரும்புத் தோட்ட முதலாளிகள் தமது தொழிலில் ஏற்படும் நஷ்டங்களை தவிர்ப்பதற்காக சுகர் ரிபைனிங் கம்பெனி 5 லட்சம் பவுண்டு பணத்தை அவர்களுக்கு முன்பணமாகக் கொடுத்துச் சர்க்கரை உற்பத்தியைத் தொடர்ந்து நடத்திட வழி செய்தது. ஆகையால் சர்க்கரையின் விலை வீழ்ச்சி சுகர் ரிபைனிங் கம்பெனியின் உற்பத்தியையும், மூலதனத்தையும் பெரும் அளவிற்குப் பாதிக்கப்படுவதிலிருந்து காத்துக் கொண்டது.

1895-இல் பிஜி தீவுகளின் கரும்புத் தோட்டங்களில் இந்திய ஒப்பந்தக் கூலிகளுக்கு பின்வருமாறு பணிச்சுமைகள் நிர்ணயிக்கப்பட்டன. ஞாயிற்றுக்கிழமை தவிர ஏனைய தினங்களில் 9 மணி நேரம் தொடர்ச்சியாக கடினமான வேலைகளைக் கரும்புத் தோட்டங்களில் செய்ய வேண்டியிருந்தது. புலப்பெயர்வுச் சட்டத்தின் அடிப்படையில் ஒப்பந்தக் கூலித்தொழிலாளர்களின் ஒப்பந்த காலம் 5 வருடமாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்த காலம் தொழிலாளர்கள் தோட்டங்களுக்கு வந்த தினத்திலிருந்து தொடங்குவதாகக் குறிப்பிடப்பட்டது.

தோட்டங்களில் வேலை செய்கின்ற தொழிலாளர்கள் இளம் வயதுத் தொழிலாளர்கள், குழந்தைத் தொழிலாளர்கள் என இரண்டு விதமான குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர். 15 வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் தொழிலாளர்கள் இளம் வயது தொழிலாளர்களாக வரையறுக்கப்பட்டனர். 15 வயதிற்குக் குறைவாக இருந்த தொழிலாளர்கள் குழந்தைத் தொழிலாளர்களாக வரையறுக்கப்பட்டனர். நிர்ணயிக்கப்பட்ட வேலைப் பளுவை செய்து முடிக்கும் ஆண், பெண், இளம் வயது தொழிலாளர்களுக்கு 8 அணா தின ஊதியமாக வழங்கப்பட்டது. பெண், இளம் வயது ஒப்பந்தக் கூலித் தொழிலாளர்களுக்கு ஆண் ஒப்பந்தக் கூலித் தொழிலாளர்கள் செய்ய நிர்ணயிக்கப்பட்ட வேலை பளுவில் பாதி அளவு வழங்கப்பட்டது. நிர்ணயிக்கப்பட்ட பணிச்சுமையைச் செய்து முடிக்கும் பெண் இளம் வயது தொழிலாளர்களுக்கு 6 அணா தின ஊதியமாக நிர்ணயிக்கப்பட்டது. இவர்களுடைய ஊதியம் வாரத்திற்கு ஒருமுறை வழங்கப்பட்டது. ஒவ்வொரு ஒப்பந்த கூலித் தொழிலாளர்களுக்கும் தேவையான தங்குமிடத்தை இலவசமாகத் தோட்ட முதலாளிகள் கொடுக்க வேண்டுமென புலப்பெயர்வுச் சட்டம் வலியுறுத்தியது. தொடர்ச்சியாக பத்து வருடங்கள் பிஜித் தீவுகளில் வாழ்கின்ற இந்திய ஒப்பந்தக் கூலித் தொழிலாளர்களுக்கு மட்டும் இலவசப் பயணச்சீட்டு வழங்கப்படும் எனவும் புலப்பெயர்வுச் சட்டம் வரையறுத்தது. 1897-இல் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பில் 10,000 இந்திய ஒப்பந்தக் கூலித் தொழிலாளர்கள் பிஜித் தீவுகளில் வாழ்வதாகக் கணக்கிடப்பட்டது.

பிஜித் தீவுகளின் நௌவா பகுதியிலிருந்த சுகர் ரிபைனிங் கம்பெனியின் இரண்டாவது மிகப்பெரிய சர்க்கரை ஆலையில் 1,20,000 பவுண்டு தொகையை மூலதனம் செய்திருந்தது. பெரும் முதலீட்டோடு பிஜி தீவுகளில் செயல்பட்ட சுகர் ரிபைனிங் கம்பெனியினால் தமது பங்குதாரர்களுக்கு சர்க்கரைத் தொழிலில் இலாபம் கிடைக்காத காரணத்தால் 1896-ஆம் ஆண்டிற்கான ஈவுத்தொகை தரமுடியாமல் போனது. தரமான இந்திய ஒப்பந்தக் கூலித் தொழிலாளர்கள் தொடர்ந்து வேலை செய்ய கிடைக்காமல் போனால் கம்பெனியை மூடுவதைத்தவிர வேறு வழியில்லை என 1895-இல் சுகர் ரிபைனிங் கம்பெனி அறிவித்தது.

1900-ஆம் ஆண்டு பிஜியிலிருந்த 405 இந்திய ஒப்பந்தக் கூலித் தொழிலாளர்களின் ஒப்பந்தகாலம் முடிவடைந்து தாயகம் திரும்பினர். இவர்களில் 80 பெண்களும் 2 குழந்தைகளும் அடங்குவர். 405 தொழிலாளர்களில் 228 நபர்கள் தமக்கு வழங்கப்பட்ட ஊதியத்திலிருந்து சேமித்த சிறிதளவு பணத்துடன் ஊர் வந்து சேர்ந்தனர். 177 தொழிலாளர்கள் எந்தவொரு சேமிப்பும் இல்லாமல் நலிந்த நிலையில் தாயகம் வந்தனர். 1891-92-லிருந்து 1901-02 வரை இந்தியாவிலிருந்து பிஜித் தீவுக்கு ஒப்பந்தக் கூலிகளாகச் சென்றவர்கள் குறித்த தகவல்களைப் பட்டியல் III. 1 தருகின்றது.

**பட்டியல் III. 1**

1891-92-லிருந்து 1901-02 வரை இந்தியாவிலிருந்து பிஜித் தீவுக்கு புலம் பெயர்ந்தவர்கள்

| புலம் பெயர்ந்த வருடம் மற்றும் துறைமுகம் | இலக்கு: பிஜி |
|---|---|
| 1891-92, கல்கத்தா | 1,985 |
| 1891-92, கல்கத்தா | 1,985 |
| 1892-93, கல்கத்தா | 781 |
| 1893-94, கல்கத்தா | 1,082 |
| 1894-95, கல்கத்தா | 1,432 |
| 1895-96, கல்கத்தா | 565 |
| 1896-97, கல்கத்தா | 1,953 |
| 1897-98, கல்கத்தா | 567 |
| 1898-99, கல்கத்தா | ே-யு |
| 1899-00, கல்கத்தா | 1,490 |
| 1900-01, கல்கத்தா | 2,553 |
| 1901-02, கல்கத்தா | 2,319 |

தரவு: Moral and Material Condition of India, Reports for the years 1891-92 to 1901-02, p. 321

வட இந்தியப் பகுதிகளில் 1901 மற்றும் 1902-இல் அறுவடை நன்றாக இருந்த காரணத்தினால் பிஜித் தீவுகளுக்குத் தேவையான ஒப்பந்தக் கூலித் தொழிலாளர்களின் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் எதிர்பார்த்தபடி அமையவில்லை. இதே வருடம் பிளேக் நோய் பரவலின் காரணமாக புலப் பெயர்வு நிறுவனத்தின் துணை-கிட்டங்கிகளும் மூடப்பட்டன. இவற்றால் இந்தியாவிலிருந்து பிஜிக்கு ஒப்பந்தக் கூலித் தொழிலாளர்களோடு செல்ல வேண்டிய கப்பல் ஒன்று ஒரு மாத காலம் தாமதப்படுத்தி அனுப்பப்பட்டது.

தொழிலாளர்களின் கிடைப்பின்மை அதிகமாக தொடங்கியதால் ஆள்காட்டிகளுக்கு வழங்கப்பட்டு வந்த தரகுத்தொகை அதிகரிக்கப்பட்டது. அதிகத் தரகுப் பணம் பெறவேண்டி ஆள்காட்டிகள் கிராமப்புறங்களுக்குச் சென்று மக்களைக் கிராமங்களிலிருந்து வெளியேறி அன்னிய நாடுகளுக்கு புலம் பெயரத் தூண்டினர். இதே காலக்கட்டத்தில் பிஜியில் செயல்பட்டு வந்த சர்க்கரை ஆலைகள் தமது உற்பத்தியை வெகுவாக அதிகரிப்பதற்கான வேலைகளைச் செய்யத் தொடங்கி இருந்தது.

தென்-இந்தியாவின் தமிழகப் பகுதிகளிலிருந்து கிடைக்கப்பட்ட திடகாத்திரமான ஒப்பந்தக் கூலித் தொழிலாளர்களைக் கரும்புத் தோட்டங்களுக்குச் சேகரிக்க முடியுமா என பிஜி அரசு யோசிக்க தொடங்கியது. இருப்பினும் தமிழ் மொழி பேசும் தொழிலாளர்களை தமது நாட்டிற்கு இறக்குமதி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இரண்டு ஆண்டு காலம் பிஜி அரசுக்கு தேவைப்பட்டது. அதே ஆண்டு ஆஸ்திரேலியாவில் இருந்த கலோனியல் சுகர் ரிபைனிங் கம்பெனியின் முதன்மைச் செயலாளர் தாமஸ் கக்ஸ் (Thomas Hughes) சிட்னி மாகாணத்திலிருந்த தமது கம்பெனி முகவர்கள் இந்தியாவில் நடத்தும் ஆட்சேர்ப்பு முகாமை மதராஸ் பகுதிக்கு உடனடியாக மாற்றும்படி ஆலோசனை வழங்கினார். தமிழகத் தொழிலாளர்கள் திடகாத்திரமான உடலமைப்பை இயல்பாக பெற்றிருந்ததும், கடினமான வேலைகளை எளிதாகச் செய்வதற்கு பழக்கப்பட்டு இருந்ததுமே தாமஸ் கக்ஸின்

இத்தகைய நடவடிக்கைக்குக் காரணமாகும். இதே வருடம் தாமஸ் கக்ஸ் இந்தியாவிற்கு பயணம் மேற்கொண்டு தமது கம்பெனிக்கு தேவையான ஒப்பந்தக் கூலித் தொழிலாளர்களை சேகரிப்பது குறித்து விசாரணை மேற்கொண்டார். விசாரணையின் முடிவில் சுகர் ரிபைனிங் கம்பெனிக்கு பின்வருமாறு அறிக்கை ஒன்றை சமர்பித்தார்: "முந்தைய காலத்தைப் போல் தொடர்ந்து இந்தியாவிலிருந்து தேவையான தொழிலாளர்களைப் பிஜிக்கு எளிதாக இறக்குமதி செய்வதென்பது இயலாத காரியம் ஆகும். ஏனெனில் பஞ்சம், வறட்சி, பிளேக் நோயின் தொற்று ஆகிய காரணங்களால் ஏற்பட்ட கூலித் தொழிலாளர்களின் உயிரிழப்பு இந்தியாவின் ஒட்டு மொத்த மக்கள் தொகைப் பெருக்கத்தின் விகிதாசாரத்தை வெகுவாகப் பாதித்துள்ளது. இதுதவிர இந்தியாவின் அருகாமை பகுதிகளான அஸ்ஸாம் மற்றும் பர்மாவில் நடைபெற்று வரும் சுரங்கத் தொழிலுக்கும் மற்றும் அங்கு தொடர்ந்து நிறுவப்பட்டு வரும் பல்வேறு தொழிற்சாலைகளுக்கும் வேலை செய்வதற்காக ஏராளமான இந்திய தொழிலாளர்கள் சென்றுவிட்டனர். ஆகையால் மதராஸ் பகுதியில் சுகர் ரிபைனிங் கம்பெனிக்கு தேவையான கூலித் தொழிலாளர்களை சேகரிக்க கட்டாயமாக ஒரு புலப்பெயர்வு நிறுவனத்தின் கிளை அமைக்கப்பட வேண்டுமென" பரிந்துரை செய்தார். தாமஸ் கக்ஸ்ஸின் அறிக்கையை சுகர் ரிபைனிங் கம்பெனி பிஜி அரசிடம் சமர்ப்பித்தது. தாமஸ் கக்ஸ்ஸின் பரிந்துரையை ஏற்றுக்கொண்ட பிஜி அரசு அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டது.

1902-ஆம் ஆண்டு தாமஸ் கக்ஸ்ஸின் பரிந்துரையை நடைமுறைப் படுத்துவதற்காக பிஜி அரசு புலப் பெயர்வு நிறுவனம் ஒன்றை மதராஸ் பகுதியில் அமைத்து கொள்வதற்காகப் பிரிட்டிஷ்-இந்திய அரசிடம் அனுமதி கோரியது. தமது கோரிக்கையை நியாயப்படுத்துவதற்காக பின்வரும் வாதத்தை முன்வைத்தது. எத்தகைய சூழ்நிலையிலும் பிஜி தீவுகளுக்கு நடக்கும் இந்திய ஒப்பந்தக் கூலிகளின் புலப் பெயர்வு தடைப்பட்டுவிடக்கூடாது என்பதற்காகவே இந்தியாவில் மேலும் ஒரு புலப்பெயர்வு நிறுவனத்தை மதராஸில் கட்டாயமாக நிறுவ வேண்டிய நிலையில் பிஜி அரசு உள்ளது என வாதிட்டது. பிளேக் நோய்த் தொற்றின் பரவல் காரணமாகத் தொடர்ந்து தொழிலாளர்களைத் தந்து கொண்டிருக்கும் கிராமப்புறங்களிலிருந்து தொழிலாளர்களைப் பெற முடியாமல் போவதற்கான சாத்தியங்கள் இருப்பதானால் மதராஸில் கிடைக்கும் ஒப்பந்தக் கூலிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்காகக் கட்டாயமாக புலப் பெயர்வு நிறுவனம் வேண்டுமெனக் கோரியது.

பிஜி அரசின் கோரிக்கையை பிரிட்டிஷ்-இந்திய அரசு ஏற்றுக்கொண்டது. இதன் தொடர்பாக காலனிய நாடுகளின் செயலாளருக்குப் பிரிட்டிஷ்-இந்திய அரசு எழுதிய கடிதத்தில் "மதராஸில் பிஜி அரசு புலப்பெயர்வு நிறுவனத்தை நிறுவிக் கொள்வதற்கு எத்தகைய தடையும் இல்லை" என கூறியது. மதராஸ் மாகாண அரசும் பிஜி அரசின் கோரிக்கையை மகிழ்வுடன் ஏற்றுக்கொண்டது. ஜெ. ஈ. காண்ரோன் (J.E. Conron) என்பவர் மொரிசீயஸ் தீவுக்கான புலப்பெயர்வு நிறுவனத்தின் முகவராக பணிபுரிந்து வந்தார். அவரிடமே பிஜி தீவுகளுக்கான புலப்பெயர்வு நிறுவனத்தின் பொறுப்பும் ஒப்படைக்கப்பட்டது. மதராஸ் பகுதிகளிருந்து சேகரிக்கப்பட்ட ஒப்பந்தக் கூலித் தொழிலாளர்களை மொரிசீயஸ், டிரினிடா (Trinidad) மற்றும் பிஜி தீவுகள் பகிர்ந்துக் கொண்டன.

முதன்முதலாக 1903-இல் 'எல்ப்' (Elbe) என்ற கப்பல் 598 மதராஸ் மாகாண ஒப்பந்தக் கூலித் தொழிலாளர்களைப் பிஜித் தீவுகளுக்கு ஏற்றிச் சென்றது. மதராஸ் பகுதிகளிலிருந்து ஏராளமான தமிழர்கள், தெலுங்கர்கள், மலையாளிகள், கன்னட மொழி பேசுபவர்கள் பிஜித் தீவிற்குப் பொரும்பான்மையாகச் சென்றனர்.

ஏராளமான தமிழர்கள் வடஆற்காடு, மெட்ராஸ், செங்கல்பட்டு, கோயம்பத்தூர், தஞ்சாவூர், மலபார், கிருஷ்ணா, கோதாவரி, விசாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களிலிருந்து புலம் பெயர்ந்தனர். ஒவ்வொரு வருடமும் மதராஸ் மாகாணத்திலிருந்து பிஜித் தீவுகளுக்கு புலம் பெயர்ந்த தொழிலாளர்களில் பாதிக்கும் மேற்பட்டோர் மெட்ராஸ் மற்றும் வட ஆற்காடு மாவட்டங்களைச் சேர்ந்தவர்களே ஆவர். 1905-லிருந்து 1910-வரை ஏறத்தாழ 8,000 இந்திய தொழிலாளர்கள் பிஜித் தீவிற்கு புலம் பெயர்ந்திருந்தனர். ஐந்தாண்டு காலத்தில் ஒப்பந்த காலம் முடிவடைந்த சுமார் 2,200 தொழிலாளர்கள் பிஜியிலிருந்து இந்தியா வந்தனர்.

தொழிலாளர்களைச் சேகரித்து காலனிய நாடுகளுக்கு அனுப்பிய முகவர்கள் பெண் ஒப்பந்தக் கூலித் தொழிலாளர்கள் கடல் பயணத்திற்குக் கிடைக்காமல் பெரும் அவதிப்பட்டனர். இந்தியாவில் ஏராளமான ஆண் தொழிலாளர்கள் புலம் பெயர்ந்து சென்று வேலை செய்வதற்குத் தயாராக இருந்தாலும் பெண்கள் கடல் கடந்து சென்று அன்னிய நாடுகளில் வேலை செய்வதற்கு அவர்களின் மரபு அனுமதிக்கவில்லை. 1883-இல் இயற்றப்பட்ட 21-வது பிரிட்டிஷ்-இந்திய புலப்பெயர்வு சட்டத்தின் 77 சரத்து 10 ஆண்களுக்கு 4 பெண்கள் என்ற விகிதாச்சார அடிப்படையில் ஆண்களுக்கு இணையாகப் பெண்கள் கப்பல் பயணம் மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்தியது. இந்திய பெண்களின் உடல் ஆரோக்கியம் பெரும்பாலும் பெண்களுக்கு இடையே வெவ்வேறு தன்மை கொண்டிருந்த காரணத்தால் தொலைதூரப் பயணங்களை மேற்கொள்ள விரும்பாதவர்களாக இருந்தனர். மூன்றில் ஒரு பங்கு இளம் பெண்கள் தங்கள் கணவர்களோடு கப்பல் பயணம் மேற்கொண்டனர். இவர்கள் பெரும்பாலும் ஒடுக்கப்பட்ட குடிகளிலிருந்து வந்தவர்களே. இந்தியப் புலப்பெயர்வுச் சட்டத்தை எதிர்கொள்வதற்காக ஏராளமான இனம் தெரியாத ஆண்களுக்கும் பெண்களுக்கும் கிட்டங்கிகளில் ஆள்காட்டிகள் திருமணம் செய்துவைத்தனர். ஏனெனில் புலம் பெயர விரும்பும் பெண்கள் தங்களது கணவனின் அனுமதியை புலப் பெயர்வுக்கு முன்பாக பெற்றிருக்க வேண்டும் என புலப் பெயர்வு சட்டம் வரையறுத்து இருந்ததுவே இத்தகைய திருமணங்களுக்குக் காரணம் ஆகும். தன்னிச்சையாகப் புல பெயர்வில் பங்கெடுத்த பெண்களில் பெரும்பாலனோர் விதவைகள், கணவன் வீட்டிலிருந்து வெளியேறிய பெண்கள், விபச்சாரத்தைத் தொழிலாகக் கொண்டவர்களுமே ஆவர்.

பத்து ஆண் ஒப்பந்தக் கூலித் தொழிலாளர்களுக்கு இணையாக நான்கு பெண்கள் கட்டாயமாக கப்பல் பயணம் மேற்கொள்ள வேண்டும் என வகுக்கப்பட்டிருந்த விதியைப் புலப் பெயர்வு முகவர்களாலும், ஆள்காட்டிகளாலும் பெரும்பான்மையான கப்பல்களின் பயணங்களில் கடைபிடிக்க முடியாமல் போனது. சட்டத்திற்குப் புறம்பாக ஏராளமான கப்பல்கள் ஆண்களுக்கு இணையான பெண்களின் எண்ணிக்கை இல்லாமல் பிஜி தீவுகளுக்குப் பயணம் மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது. இத்தகைய குறையைச் சரி செய்ய புலப் பெயர்வு விதி 78-ஐ பிரிட்டிஷ்-இந்திய அரசு அமல்படுத்தியது. விதி 78-ன் அடிப்படையில் பெண்களின் எண்ணிக்கையில் பற்றாக்குறையோடு இந்திய துறைமுகங்களிலிருந்து காலனிய நாடுகளுக்கு பயணம் செய்யும் கப்பல்கள் எதிர்காலத்தில் முந்தைய பற்றாக்குறையை ஈடுகட்டிய பின்பே துறைமுகங்களிலிருந்து பயணம் மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்படும் என அறிவித்தது.

ஒவ்வொரு வருடமும் 15-டிசம்பர் முதல் 31-மார்ச் வரை இந்திய துறைமுகங்களிலிருந்து கப்பல்கள் பிஜி தீவிற்கு பயணங்கள் மேற்கொள்வதற்குப் பிரிட்டிஷ்-இந்திய அரசு தடைவிதித்திருந்தது. டிசம்பர் முதல் மார்ச்

மாதம் வரை நிலவிய பருவகால மாற்றங்களால் கடல்களில் பெரும் புயல்கள் உருவாவது இயல்பாக நிகழ்ந்தது. புயல்களுக்கு நடுவே கடலில் பயணம் மேற்கொள்ளும் கப்பல்கள் எதிர்பாராத விபத்துக்களில் சிக்கிப் பெருத்த சேதங்களுக்கு உள்ளாகிவிடும் என்பதே இத்தகைய தடைக்குக் காரணமாக இருந்தது. 1908-இல் இத்தகைய தடையை பிரிட்டிஷ்-இந்திய அரசு கைவிடுமாறு பிஜி அரசு வேண்டியது. புதிதாக அறிமுகப்படுத்தபட்ட சக்தி மிக்க இயந்திரங்களைக் கப்பல்களில் பொருத்திப் பயன்படுத்துவதால் தொழிலாளர்களை வேகமாகவும், பாதுகாப்பாகவும் பிஜித் தீவுகளுக்கு அழைத்துச் செல்லமுடியும் என புலப்பெயர்வு நிறுவனத்தின் பொது மேலாளர் பிரிட்டிஷ்-இந்திய அரசிடம் கூறினார். இதனை ஏற்று பிரிட்டிஷ்-இந்திய அரசு புலப்பெயர்வு விதிகளை மாற்றி அமைத்து பிஜித் தீவிற்கான கப்பல்களின் பயணம் எத்தகைய காலநிலைகளிலும் இந்திய துறைமுகங்களிலிருந்து நடைபெறுவதற்கு அனுமதியளித்தது.

1910-திற்கு பின்பு தொடர்ச்சியாக பத்தாண்டுகளுக்கு மேலாக பிஜித் தீவுகளில் வாழ்ந்த இந்திய கூலித் தொழிலாளர்கள் கரும்புத் தோட்ட வேலைகளைவிட்டு வெளியேறினர். இவ்வாறு வெளியேறிய கூலித் தொழிலாளர்கள் மீண்டும் தோட்ட முதலாளிகளிடம் ஒப்பந்தங்கள் செய்து கொண்டு வேலை செய்வதற்கு விரும்பவில்லை. இவர்களில் அனேகர் குத்தகைக்குச் சிறிய அளவு நிலங்களை வாங்கி விவசாயிகளாக குடியமர்ந்தனர்.

1891-இல் பிஜி தீவில் வாழ்ந்த 7,988 இந்தியர்களில் 4,421 நபர்கள் ஒப்பந்தக் கூலிகளாகப் பணிபுரிந்தனர். 1901-இல் 18,425 இந்தியர்கள் பிஜியில் இருந்தனர். அவர்களில் 7,033-பேர் ஒப்பந்தக் கூலிகள் ஆவர். 1911-இல் இருந்த 44,220 இந்தியர்களில் 14,462-பேர் ஒப்பந்தக் கூலிகள் ஆவர். 1902-க்கு பின்பு பிஜித் தீவிற்கு ஒப்பந்தக் கூலிகளாகச் சென்றவர்களில் பெரும்பான்மையினர் தென்-இந்தியர்களே. 1910-திற்க்கு பின்பு பிஜியிலிருந்த கரும்புத் தோட்டங்கள் 600 முதல் 1,000 ஏக்கர் பரப்பளவிற்குரிய சிறு தோட்டங்களாகப் பிரிக்கப்பட்டு கண்காணிகளிடமும், தனி வெள்ளை முதலாளிகளுக்கும் குத்தகைக்கு விடப்பட்டது. இவ்வாறு பிரிக்கப்பட்ட தோட்டங்களில் 60 முதல் 100 இந்திய ஒப்பந்தக் கூலிகள் வேலை செய்ய நியமிக்கப்பட்டனர்.

1914-ஆம் ஆண்டின் முக்கிய நிகழ்வாக பிஜி, ஜமைக்கா, பிரிட்டிஷ் கயானா ஆகிய காலனி நாடுகளுக்கான புலப்பெயர்வு நிறுவனம் ஒன்றிணைக்கப்பட்டது. இவ்வாறு ஒருங்கிணைக்கப்பட்ட புலப்பெயர்வு நிறுவனத்தின் நிர்வாகப் பொறுப்பு பெனாரஸ் நகரத்திலிருந்த நடுவன் புலப்பெயர்வு நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இதே வருடம் இந்திய ஒப்பந்தக் கூலித் தொழிலாளர்களின் காலனிய நாடுகளுக்கான புலப்பெயர்வு குறித்து விசாரிப்பதற்காக பிரபு சேண்டர்சன் (Lord Sanderson) தலைமையில் விசாரணைக் குழு ஒன்றை பிரிட்டிஷ்-இந்திய அரசு அமைத்தது. விசாரணையின் முடிவில் பிரிட்டிஷ்-இந்திய அரசுக்கு பிரபு சேண்டர்சன் வழங்கிய அறிக்கையின் அடிப்படையிலேயே காலனிய நாடுகளான பிஜி, ஜமைக்கா, பிரிட்டிஷ்-கயானாவின் இந்திய புலப்பெயர்வு நிறுவனங்களின் ஒருங்கிணைப்பு நடைப்பெற்றது. இதே வருடம் பிஜியிலிருந்த 287 ஒப்பந்தக் கூலித் தொழிலாளர்களின் ஒப்பந்த காலம் முடிவடைந்து இந்தியாவிற்குத் திரும்பினர்.

ஒப்பந்தக் கூலித் தொழிலாளர்களின் கரும்புத் தோட்ட தினசரி வாழ்க்கை அதிகாலை 3 அல்லது 4 மணிக்கு தொடங்கியது. பொதுக் குடியிருப்புகளில் உறங்கிக் கொண்டிருக்கும் தொழிலாளர்களை ஒரே நேரத்தில் எழுப்புவதற்கு ஆலைகளில் அமைக்கப்பட்டிருந்த ஊதாங்குழலின் சப்தம் பயன்படுத்தப்பட்டது. அதிகாலை 5 மணிக்கு தோட்ட கங்காணிகளின் முன்பு தோட்டங்களில்

பணி தொடங்குவதற்கான கணக்கெடுப்பிற்காகக் கூட வேண்டும். கங்காணிகளின் கணக்கெடுப்பில் கலந்துகொள்வதற்கு முன்பாக வீடுகளில் செய்ய வேண்டிய அன்றைய வேலைகளைச் செய்து முடித் திருக்க வேண்டும். குறிப்பாகக் காலை சிற்றுண்டிக்கும், மதிய உணவிற்கும் தேவையான உணவுகளைத் தயார் செய்து கொண்டு வரவேண்டியிருந்தது. 5 அல்லது 6 மணிக்கு தோட்டத்தில் வேலையை ஆரம்பிக்க வேண்டுமெனக் கண்காணிகள் தொழிலாளர்களை நிர்பந்திப்பார்கள். தொழிலாளர்கள் தனித்தனி கண்காணிகள், துணை-கங்காணிகள் கீழ் தனித் தனி குழுக்களாகப் பிரிக்கப்பட்டுத் தோட்ட வேலைகளில் அமர்த்தப்பட்டனர். பெண்கள் அனைவரும் தனிக் குழுக்களாகச் செயல்பட்டனர். இருப்பினும் ஆண்களுக்கும், பெண்களுக்கும் நிர்ணயிக்கப்பட்ட பணிச்சுமை தனிநபர் சார்ந்தாகவே இருந்தது.

1878-இல் பிஜித் தீவின் அரசு இயற்றிய தற்காலிக புலப் பெயர்வுச் சட்டத்தின் அடிப்படையில் ஞாயிற்றுக்கிழமைதவிர மற்ற நாட்களில் இந்திய ஒப்பந்தக் கூலித் தொழிலாளர்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்ட வேலைப் பளு அளவீட்டின் (task work) அடிப்படையிலோ அல்லது மணித்துளிகளின் (timework) அடிப்படையிலோ இருக்க வேண்டுமென வரையறுத்தது.

1916-ஆவது வருடம் மகாத்மா காந்தியின் சீடர்களான சி.எப். ஆண்டுருஸ் (C.F. Andrews) மற்றும் டபில்யு. டபில்யு. பியர்சன் (W.W. Pearson) "பிஜித் தீவுகளின் கரும்புத் தோட்டங்களில் வாழ்ந்து வந்த இந்திய ஒப்பந்தக் கூலித் தொழிலாளர்களின் வாழ்நிலை குறித்து விசாரணை மேற்கொள்ள சென்றனர். விசாரணையில் கங்காணிகள் ஒப்பந்தக் கூலித் தொழிலாளர்களை இடைவேளை ஏதும் இல்லாமல் தொடர்ச்சியாக 12 மணி நேரம் தோட்டங்களில் வேலை செய்ய நிர்பந்திக்கப்பட்டு வருவதைக் கண்டுபிடித்தனர். சர்க்கரை ஆலைகளில் 12 மணி நேர கடின வேலை இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை மாற்று முறையில் (shifts system) அமல்படுத்தபட்டு இருந்ததும் தெரியவந்தது. மாற்று முறையில் அதிகாலை 6 மணிக்கு தொடங்கப்படும் வேலை மாலை 6 மணி வரை தொடர்ச்சியாக நடந்தது. வேலையின் தொடர்ச்சி மாலை 6 மணிக்கு தொடங்கி மறுநாள் அதிகாலை 6 மணி வரை நடந்தது. திறமை மிக்க இந்திய தொழிலாளர்கள் நிர்ணயம் செய்யப்பட்ட வேலைகளை திறம்படச் செய்து முடித்தாலும் கம்பெனி நிர்வாகம் அவர்களுக்கு வழங்கிய ஊதியத்தை மட்டும் எப்பொழுதும் குறைத்தே கொடுத்தது.

31 ஜனவரி 1917-இல் ஆந்திர பத்திரிக்கா என்ற இதழ் பிஜி தீவில் இந்தியப் பெண் ஒப்பந்தக் கூலித் தொழிலாளர்கள் அனுபவித்த சித்தரவதைகள் குறித்து எழுதியது: "இந்திய கிராமப்புறங்களிலிருந்து சென்ற ஆண்களையும் பெண்களையும் ஒரே தோனியில் ஏற்றி மூன்று ஆண்களுக்கு ஒரு பெண் என்கின்ற விகிதத்தில் நெருக்கடி நிறைந்த தோனியின் அறைக்குள் அடைத்து அன்னிய தேசங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர் தோட்டங்களில் அமைக்கப்பட்டிருந்த பொதுக் குடியிருப்பில் இவர்களை வாழ நிர்பந்திக்கின்றனர். பொதுக் குடியிருப்பு என்பது சுத்தத்தன்மை அற்ற நிலையில் வாழ்வதற்கே தகுதியற்ற நிலையில் இருக்கின்றது. ஆண்களும் பெண்களும் முறையற்ற வகையில் பாலியல் தொடர்புகள் வைத்திருக்கினறனர். பலதார திருமணமுறை பல்வேறு வகையில் அங்கு அரங்கேறிக் கொண்டிருக்கிறது. ஒரு பெண்ணை அவளது சம்மதம் இல்லாமலே மனைவி ஆக்கிகொள்ளும் சட்டத்தைப் பிஜி அரசு இயற்றியுள்ளது கற்புக்கரசிகளுக்குப் பெயர் பெற்ற இந்தியாவிற்கு இவர்கள் எல்லாம் இழுக்குச் சேர்ப்பவர்கள் ஆவர். சீதை, சாவித்திரி, அருந்ததி போன்ற நெறி தவறாத பெண்களைக் குழந்தைப் பருவத்தில் முன் உதாரணமாக காட்டி இந்திய பெண்களை

சமூகம் வளர்த்து வந்தது இப்பொழுது கேள்விக்குள்ளாக்கபட்டுள்ளது. ஒரு பெண்ணுக்கு ஒரு கணவன் என்கின்ற மேன்மைத்தன்மையை இந்திய தேசம் போதித்து வருகின்றது. இவ்வாறு வளர்த்தெடுக்கப்பட்ட இந்தியப் பெண்கள் எந்தவொரு தனிமை ரகசியங்களைக் கூட பாதுகாப்பதற்கு வழி இல்லாத பொதுக் குடியிருப்புகளில் வாழ நிர்பந்திக்கப்பட்டு வருகின்றனர். இத்தகைய வாழ்விடங்கள் அவர்களின் நன்னடத்தையையும், தனிமையையும் முற்றிலும் பாதித்து விட்டது. புலம் பெயருகின்ற இந்திய கிராமப் பெண்களிடம் பொதுக் குடியிருப்பின் வாழ்வு அமைப்பை பற்றி ஏதும் கூறாமல் மறைத்து ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன வீடுகளிலிருந்து வெளியேறி அன்னிய தேசங்களுக்கு சென்று வாழும் ஆண்கள் நெறி தவறி குடிப்பதற்கும், பரத்தையர்களிடம் கூடுவதற்கும் தமது வாழ்க்கையைச் செலவு செய்கின்றனர். ஆகையால் சுய கௌரவத்தை இழந்து நிற்கின்றனர் இந்திய விதவைப் பெண் ஒருத்தியிடம் தோட்ட கண்காணி ஒருவன் கேட்ட லஞ்ச பணத்தைத் தருவதற்கு முடியாமல் போனதற்காக அவனால் அவள் கற்பழிக்கப்பட்டாள். அந்த விதவை பெண்ணை 19 இந்திய ஆண்கள் ஒன்று சேர்ந்து துண்டு துண்டாக வெட்டி கொலை செய்துவிட்டு நீதிமன்றம் வழங்கிய தண்டனை ஏற்றுக்கொண்ட மிகக்கேவலமான செயலும் பிஜியில் நடந்துள்ளது. திருமணமான பெண்கள்கூட கடத்தப்பட்டுப் பிஜி தீவின் சட்டத்தின் அடிப்படையில் வேறு ஆண்களுக்கு மரியாதைக்குரிய மறுமணம் செய்து கொடுக்கப்படும் காரியமும் நடக்கின்றது இத்தகைய நிகழ்வால் ஆத்திரமடைந்த இரண்டு சகோதரர்கள் தங்கள் குடும்ப மானத்தைக் காப்பாற்றுவதற்காக உடன்பிறந்த சகோதரியை சுட்டுக் கொலை செய்துவிட்டு தூக்கு மேடைக்குச் சென்றுள்ள சம்பவமும் நடந்துள்ளது.”

அதே வருடம் 61,000 இந்திய தொழிலாளர்கள் பிஜி தீவுகளில் வசிப்பதாக ஆஸ்திரேலியாவின் சமூக சேவகர் பிளாரன்ஸ் இ. கிரகாம் (Florence E. Garnham) மேற்கொண்ட மக்கள் தொகை கணக்கெடுப்பில் குறிப்பிட்டார். முதலாம் உலகப்போர் தொடங்கிய காரணத்தால் மனித சக்தியை சேமிப்பதற்காக 1915 ஆண்டு இயற்றப்பட்ட இந்திய பாதுகாப்புச் சட்டத்தின் அடிப்படையில் 12 மார்ச் 1917-இல் மேற்கு-இந்திய தீவுகளுக்கும், பிஜி தீவுகளுக்குமான இந்திய கூலித் தொழிலாளர்களின் புலப்பெயர்வை பிரிட்டிஷ்-இந்திய அரசு தடை செய்து உத்தரவு பிறப்பித்தது. 1908-ஆம் ஆண்டின் 7-வது சட்டத்தின் அடிப்படையில் பிரிட்டிஷ் மற்றும் ஐரோப்பிய காலனிய நாடுகளுக்கு இந்திய கூலித் தொழிலாளர்களை புலம்பெயர ஆட்சேர்ப்பு செய்வதையும் பிரிட்டிஷ்-இந்திய அரசு தடை செய்தது. இவ்வாறு 1879-இல் இந்தியாவிலிருந்து பிஜித் தீவுகளுக்குத் தொடங்கிய ஒப்பந்தக் கூலித் தொழிலாளர்களின் புலப்பெயர்வு 1920-இல் முடிவுக்கு வந்தது. 1922-இல் ஒப்பந்த காலம் முடிவுற்ற இந்திய தொழிலாளர்களால் பிஜித் தீவுகளில் நிம்மதியான வாழ்க்கையை அமைத்துக்கொள்ள முடியவில்லை என்பதும் பிரிட்டிஷ்-இந்திய அரசுக்குத் தெரியவந்தது. இந்தியத் தொழிலாளர்களின் வாழ்க்கை தரத்திற்கு ஏற்ற ஊதியத்தைத் தொடர்ந்து தோட்ட முதலாளிகள் தர மறுத்தனர். ஏராளமான இந்தியத் தொழிலாளர்கள் வேலை கிடைப்பின்மையால் வறுமையில் வாடினர். தோட்ட முதலாளிகள் இந்திய தொழிலாளர்கள் செய்த வேலைகளில் குற்றம் கண்டுபிடிப்பதை வழக்கமாக்கிக் கொண்டு தண்டனையாக வழங்கிய சம்பளத்தில் பாதிப் பணத்தைப் பிடித்தம் செய்தனர். பிஜி தீவுகளில் வாழ்ந்த இந்திய தொழிலாளர்களின் கண்களுக்கு இருண்ட எதிர்காலமே தெரிந்ததால் ஏராளமானோர் தாயகம் திரும்பினர். 1923-ஆம் ஆண்டு மட்டும் 1,964 தொழிலாளர்கள் பிஜியிலிருந்து இந்தியாவிற்கு வந்தனர்.

**துணைநூற்ப்பட்டியல்**

1. நான்கு பிரிட்டிஷ் காலனிகளில் இந்தியக் குடியேறிகளின் நிலை பற்றிய அறிக்கை, பகுதி ஐஐ, 1914, பக். 251-252
2. ஷைஷ்டா ஷமீம், ‘‘பிஜியில் புலம்பெயர்வு, உழைப்பு மற்றும் தோட்டப் பெண்கள்: ஒரு வரலாற்றுப் பார்வை,’’ ஷோபிதா ஜெயின் மற்றும் ரோடா ரெடாக் (பதிப்பு), பெண் தோட்டத் தொழிலாளர்கள் (நியூயார்க்: ஆக்ஸ்போர்டு இன்டர்நேஷனல் பப்ளிஷர்ஸ், 1998), பக்.
3. இந்தியாவிலிருந்து முடியரசின் குடியேற்ற நாடுகளுக்கும் காப்பரசு களுக்கும் குடிபெயர்வு பற்றிய குழுவின் அறிக்கை, 1910. பக்.
4. ஜான் டி.கெல்லி, ‘‘‘கூலி’ அஸ் எ லேபர் பண்டம்,’’ தி ஜர்னல் ஆஃப் பெசண்ட் ஸ்டடீஸ், தொகுதி.19, 1992, ப. 248.
5. இந்தியாவிலிருந்து முடியரசுக் குடியேற்ற நாடுகளுக்குக் குடிபெயர்தல் பற்றிய குழுவின் அறிக்கை, பகுதி III, 1910, பக். 62-63.
6. ஆந்திர பத்திரிகா, உள்ளூர் செய்தித் தாள்கள் பற்றிய அறிக்கை, ஜனவரி 31, 1917, தொகுதி 2, பக்கம் 294.
7. ஈ.கே.ஃபிஸ்க், சுதந்திர பிஜியின் அரசியல் பொருளாதாரம் (கான்பெர்ரா: ஆஸ்திரேலியன் நேஷனல் யுனிவர்சிட்டி பிரஸ், 1970), ப. 7.
8. எஸ்.ஏ.வைஸ், வெளிநாட்டில் உள்ள இந்தியர்கள் டைரக்டரி, 1934 (பம்பாய்: தி இம்பீரியல் இந்தியன் சிட்டிசன்ஷிப் அசோசியேஷன், 1934), ப.192.